# 9 ஜூன் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## செய்திகளில் இடம் பெற்ற நபர்கள்

### காலமானார் 'தமிழ்ச் செம்மல்' ஆ. சிவராமகிருஷ்ணன்



- இவர் நெட்டூர் மற்றும் மேலகரம் தொடக்கப் பள்ளி ஆசிரியராக பணியாற்றி ஓய்வுபெற்றவர்.
- தென்காசி திருவள்ளுவர் கழகத்தின் 26வது ஆண்டு விழாவில், 1953ஆம் ஆண்டு துணைச் செயலராகப் பொறுப்பேற்றார். 1965இல் செயலராகப் பொறுப்பேற்றார். குற்றாலம் ஐந்தருவி சங்கராஸ்ரமத்தின் தலைவராகவும் இருந்து வந்தார்.
- இவருடைய திருக்குறள் தொண்டைப் பாராட்டி பல்வேறு அமைப்புகள் பட்டம் வழங்கியுள்ளன.
- ராஜபாளையம் திருவள்ளுவர் மன்றத்தின் 'திருக்குறள் தொண்டர், மணப்பாறை திருக்குறள் பயிற்றகத்தின் 'திருக்குறள் பணிச்செம்மல்', கீழப்பாவூர் திருவள்ளுவர் மன்றத்தின் 'திருக்குறள் பேரொளி", சென்னைத் தமிழ்ச் சுரங்கத்தின் 'தமிழ் மாமணி, நெல்லை துணி வணிகர் இலக்கிய வட்டத்தின் 'இலக்கியச் செம்மல்' ஆகிய பட்டங்களைப்பெற்றுள்ளார்.
- தமிழக அரசு சார்பில் கடந்த ஆண்டு டிசம்பர் 21இல் 'தமிழ்ச் செம்மல்' விருது வழங்கப்பட்டது.

### 10 நாள்களில் 12,200 கி.மீ காரில் பயணம்: கோவை தொழிலதிபர் சாதனை




- இந்தியாவின் 4 மூலைகளுக்கும் 10 நாள்கள், 16 மணி நேரத்தில் காரில் பயணம் செய்து கோவையைச் சேர்ந்த தொழிலதிபர் ஜி.டி. விஷ்ணுராம் சாதனை படைத்துள்ளார். தொழிலதிபர் ஜி.டி.விஷ்ணுராம் மாரத்தான் ஓட்டப் பந்தய வீரர், சைக்கிள் வீரர், உடற்பயிற்சி ஆர்வலர் எனப் பன்முகம்கொண்டவர்.
- இவர், பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 10 நாள்கள், 16மணி நேரத்தில் நாட்டின் 4 மூலைகளுக்கும் அதாவது 12,200கி.மீ. தொலைவு காரில், பயணம் செய்து கின்னஸ் உலக சாதனை புத்தகம், ஆசிய சாதனை புத்தகம், இந்திய சாதனை புத்தகம்–2023 ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளார்.
- இந்தப் பயணமானது மே 28 –ஆம் தேதி சென்னையில் காலை 8 மணிக்கு தொடங்கியது.
- தேசு கோடேஷ்வர்– கன்னியாகுமரி என நாட்டின் நான்கு மூலைகளுக்கும் (12,200 கி.மீ.) 10 நாள்கள், 16 மணிநேரத்தில் பயணம் செய்துள்ளேன்.

SHANMUGAM IAS ACADEMY

- பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதன் அவசியத்தை உணர்த்த விழிப்புணர்வு ஏற்படுத்தவே இந்த பயணத்தை மேற்கொண்டேன். மேலும், இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக ரூ. 3 கோடியே 5,000 நிதி திரட்டப்பட்டு அந்த நிதியை கோவையில் உள்ள அரசுப் பள்ளிகளில் பெண் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி, மேம்பாட்டுக்காக வழங்க திட்டமிட்டுள்ளார்.

## செய்திகளில் இடம் பெற்ற இடங்கள்

### ஜம்முவில் திருப்பதி ஏழுமலையான் கோயில் திறப்பு



- ஜம்மு–காஷ்மீர் மாநிலம் ஜம்முவின் புறநகர்ப் பகுதியில் பக்தர்களின் தரிசனத்துக்காக திருப்பதி ஏழுமலையான் கோயில் திறக்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏழுமலையான் கோயில்களை திருப்பதி தேவஸ்தானம் கட்டி வருகிறது. அதன்படி ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசம், ஜம்முவின் புறநகரான மஜீன் பகுதியில் ஏழுமலையான் கோயில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.
- திருமலை திருப்பதி தேவஸ்தான தலைவர் ஒய்.வி.சுப்பா ரெட்டி பேசுகையில், 'ஜம்மு–காஷ் மீரில் இக்கோயில் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- மக்கள் தற்போது ஜம்முவில் இருந்தபடி திருப்பதி ஸ்ரீ வேங்கடேஸ்வரரை வழிபடலாம். மாதா வைஷ்ணவதேவி கோயிலுக்குச் செல்பவர்கள் இங்கு தரிசனம் செய்ய முடியும்' என்றார்.
- 62 ஏக்கர் பரப்பளவில் சுமார் ரூ.30 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இக்கோயில் ஜம்மு பிராந்தியத்தின் மிகப்பெரிய கோயில்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. ஆந்திர மாநிலத்துக்கு வெளியே கட்டப்பட்டுள்ள ஆறாவது ஏழுமலையான் கோயில் இதுவாகும்.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உணவுப் பாதுகாப்பு போட்டி தேசிய அளவில் கோவை மாவட்டம் முதலிடம்




- தேசிய அளவிலான 'ஈட்ரைட் சேலஞ்ச் பேஸ்–2 எனும் போட்டியில் கோவை மாவட்டம் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- உலக உணவுப் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச் சகத்தின் சார்பில் புது தில்லியில் புதன்கிழமை நடைபெற்ற விழாவில், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும்

SHANMUGAM IAS

தரநிர்ணய ஆணையத்தின் 5 ஆவது மாநில உணவுப் பாதுகாப்பு குறியீடு 2022–23ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில், தேசிய அளவில் கேரள மாநிலம் முதலிடமும், பஞ்சாப் மாநிலம் இரண்டாம் இடமும், தமிழகம் மூன்றாமிடமும் பிடித்தன. தமிழ்நாட்டுக்கான விருதை மாநில உணவுப் பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர்.லால் வேனா, மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியாவிடம் பெற்றுக் கொண்டார்.

- இப்போட்டியில் தேசிய அளவில் 231 மாவட்டங்கள் கலந்துக்கொண்டன .
- இப்போட்டியில், கோவை மாவட்டம் 200 மதிப்பெண்களுக்கு 196 மதிப்பெண்கள் பெற்று தேசிய அளவில் முதல் மாவட்டமாகத் தேர்வு செய்யப்பட்டது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### நவீன 'அக்னி பிரைம்' ஏவுகணை சோதனை வெற்றி



- அணு அயுதங்களை ஏந்திச் செல்லும் நவீன 'அக்னி பிரைம்' ஏவுகணை ஒடிஸா மாநில கடல் பகுதியில் அமைந்துள்ள ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் தீவிலிருந்து ஏவப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர் டிஓ) அதிகாரிகள் தெரிவித்தனர்.
- இந்த ஏவுகணை ஏற்கெனவே 3 முறை பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்ட நிலையில், ராணுவத்தில் சேர்க்கப்படுவதற்கு முன்பாக, முதன் முறையாக இரவு நேரத்தில் ஏவப்பட்டு, ஏவுகணையின் துல்லியம், செயல்முறையின் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

## தமிழ்நாடு செய்திகள்

### தமிழகத்தில் 3 புதிய தனியார் மருத்துவக் கல்லூரிகள்: மத்திய அரசு ஒப்புதல்



- இந்தியா முழுவதும் 50 புதிய மருத்துவக் கல்லூரிகள் திறக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில், சென்னை (பிஎஸ்ஜி அறக்கட்டளை), பெரம்பலூர் (தனலட்சுமி சீனிவாசன் கல்வி அறக்கட்டளை), ஈரோடு வாய்க்கால்மேடு (நந்தா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அறக்கட்டளை) ஆகியவை நடப்பு ஆண்டில் (2023 – 2024) தலா 150 எம்.பி.பி. எஸ். இடங்களுடன், புதிய மருத்துவக் கல்லூரி தொடங்க ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

## தேசிய செய்திகள்

### ஜூன் 7, 2023 அன்று அமைச்சரவை ஒப்புதல்

- ஜூன் 07, 2023 அன்று, பிரதமர் (PM) நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை பின்வரும் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளித்தது.
- பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (பிஎஸ்என்எல்)க்கான மூன்றாவது மறுமலர்ச்சிப் பொதிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது, மொத்த செலவில் ரூ. 89,047.82 கோடி, இதில் சமபங்கு உட்செலுத்துதல் மூலம் 4ஜி/5ஜி அலைக்கற்றை ஒதுக்கீடும் அடங்கும்.
- 2023-24 சந்தைப்படுத்தல் பருவத்திற்கான அனைத்து கட்டாய காரிஃப் பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) அதிகரிப்புக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை, 2021-22 முதல் 2025-26 வரையிலான கால நீட்டிப்புடன், 2,980 கோடி மதிப்பீட்டில், 2,980 கோடி மதிப்பீட்டில், 'நிலக்கரி மற்றும் லிக்னைட் ஆய்வு திட்டத்தை' தொடர, 15ஆம் தேதியுடன் நிதி கமிஷன் சுழற்சி ஒப்புதல் அளித்தது.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஹூடா நகர மையத்தில் இருந்து சைபர் நகரம் வரை மெட்ரோ இணைப்புக்கு ஒப்புதல் அளித்தது, ஸ்பர் முதல் துவாரகா எக்ஸ்பிரஸ்வே, குருகிராம் (ஹரியானா) 28.50 கிமீ தூரம் உள்ளது . இவ்வழியில் 27 ரயில் நிலையங்களைக் கொண்டது.

### ஜூன் 4 முதல் 5 2023 வரை அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் லாயிட் ஆஸ்டினின் இந்தியப் பயணத்தின் சிறப்பம்சங்கள்

- இரு நாடுகளுக்கும் இடையே இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த, குறிப்பாக ராணுவ வன்பொருளின் இணை வளர்ச்சிக்கான முக்கியமான தொழில்நுட்பங்களை மாற்றும் துறைகளில், அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின், ஜூன் 4 முதல் 5, 2023 வரை இந்தியாவுக்கு இரண்டு நாள் பயணமாக வந்திருந்தார். .
- பாதுகாப்புச் செயலர் ஆஸ்டினின் இரண்டாவது இந்தியப் பயணம் இது மற்றும் அவரது முந்தைய இந்தியா பயணம் மார்ச் 2021 இல் நடைபெற்றது.

SHANMUGAM IAS ACADEMY